2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

(2) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆளுநர் அவர்கள் 1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சி ஒன்றியங்கள் (3 ஆம் திருத்தச்) சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையால் நிறை வேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1986) பிரதினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடமிருந்து பெற்றுள்ளேன்.

3. தகவல் கோரல்.

(1) 'எய்ட்ஸ்' நோய் தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நாளேடு களில் வந்துள்ள செய்தி குறித்து.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இன்று தமிழ் நாட்டில் வெளி வந்துள்ள ஆங்கில, தமிழ் ஏடுகள், புது டில்லியில் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் தெரிவித்துள்ள ஒரு அதிர்ச்சியான செய்தியை வெளியிட் டிருக்கின்றன. "எய்ட்ஸ்" என்கின்ற நோய் தமிழ் நாட்டிலே 6 பேர்களுக்கு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்று டில்லியில் மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட கருத்தையொட்டி பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் அதற்காக தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து ஒரு விவரமான அறிக்கையை வெளியிடுவார்களா? பொது மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில், இந்த நோயிலிருந்து தப்புகின்ற வகையிலும், அதற்குத் தடுப்பு முறைகளைக் கடைப்பிடிக்கின்ற வகையிலும் ஒரு விவரமான அறிக்கையை அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா? நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் தெரிவிக்கும் முன்பு, டில்லி வட்டாரத்தில் பேசப்படுவதற்கு முன்பு, தமிழ் நாட்டில் பல நாட்களாக இருந்துவருகிற "எய்ட்ஸ்" நோய்பற்றி நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மாநிலத் திற்கு இந்தப் பயங்கரமான நோய்பற்றி அறிவிக்காமல் இருந்ததற்கான காரணம் என்ன என்பதையும் நான் அறிந்துகொள்ள ஆவலாக இருக்கிறேன்.

1986 ஏப்ரல் 30]

திரு எம். பி. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்த வியாதி மிகவும் கொடுமையான வியாதி என்றும், பல மாநிலங்களிலே இருக்கிறது என்றும்...

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினரவர்கள் விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

திரு எம். பி. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இது ஆங்கிலத்தில் இருக்கிறது. தமிழிலே இல்லை. இருந்தாலும் அதைப் படிக்கிறேன்

இந்த நோய் பயங்கரமான கடுமையான நோய் உலகத்தின் பல பகுதிகளில் பரவி வருகிறது. இந்தியாவிலும் இதுபற்றி தீவிரக் கண்காணிப்புச் செய்து கொண்டிருந்தார்கள். 7 மையங்களில் அதற்கு கண்காணிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டதில் சென்னையிலும் ஒன்று அமைக்கப்பட்டது. ஆனால் அந்த வியாதி தமிழ் நாட்டிற்குத்தான் முதன் முதலாக வந்திருக்கிறது. 6 பெண்கள் அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், தமிழ் நாட்டிலுள்ள மருத்துவ இலாக்கா என்ன செய்து கொண்டிருக்கிறது? டில்லியில் உள்ளவர்களுக்குத் தெரிவதற்கு முன்பு, தமிழ் நாட்டிலுள்ள அமைச்சர் அவர்கள் அவருக்குக் கீழே உள்ள அதிகாரிகள், மருத்துவர்கள் அதை உரிய காலத்தில் கண்டுபிடித்து மக்களுக்கு ஏன் தகவல் கொடுக்க வில்லை? இந்த வியாதிக்கு யுத்த காலத்தைப் போன்று தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் முழுப் பொறுப்பு ஏற்று அதற்கு சரியான, முகாந்திரமான, திருப்திகரமான பதில் சொல்லவில்லை என்று சொன்னால், எப்படி? அமைச்சர் அவர்கள் அதற்குச் சரியான பொறுப்பு ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதுவரை என்ன கண்டுபிடித்திருக்கிறார்கள், கண்காணித்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இந்த வியாதியைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே நான் பேரவையிலே பேசி யிருக்கிறேன். குறிப்பாக தமிழகத்தில் 1985 ஜூன் மாதத்தில் இதற்காக அரசு ஒரு கமிட்டியை அமைத்தது. இந்த வியாதி உலகம் எங்கும் தெரிந்தது தான். 1985 ஆம் வருடம் அக்டோபர் மாதம் அமெரிக்காவில் ராக்ஹட்சன் என்கிற ஒரு சினிமா நடிகருக்கு இந்த வியாதி வந்த நேரத்தில், அதுபற்றி உலகம் எங்கும் விளம்பரப்படுத்தப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டது. அந்த வியாதி பிரசித்தி பெற்ற ஒரு நடிகருக்கு ஏற்பட்ட காரணத்தால், தெரிய வந்தது. ஆனால் தமிழகத்தில் இந்த வியாதி பற்றி மெடிக்கல் ஜெர்னல்ஸ் மூலமாகத் தெரிந்துகொண்ட காரணத்தால், 1985 ஜூன் மாதத்தில் அதற்காக ஒரு கமிட்டி போடப்பட்டது. அந்தக் கமிட்டி டைரக்டர் ஆஃப் மைக்ரோ

பையாலாஜி தலைமையில் போடப்பட்டது. டாக்டர் சி. எஸ். லட்சுமி நாராயண தலைமையில் டாக்டர் சாரதா சண்முகசுந்தரம், டாக்டர் பிலிப் சாலமன், டாக்டர் கோபாலகிருஷ்ணன், டாக்டர் பத்மநாபன், டாக்டர் காந்தராஜ், ஆகியோரை வைத்து அந்தக் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது.

(முற்பகல் 10-20)

அதற்குப் பிறகு டிசம்பர் மாதத்திலே ஐ.சி.எம்.ஆர். என்ற நிறுவனம்—அகில இந்தியாவில் டாக்டர் இராமலிங்கசாமி அவர்களின் தலைமையில் இயங்கும் "இந்தியன் கவுன்சில் ஆஃப் மெடிக்கல் ரிசர்ச்" என்ற நிறுவனம்—எல்லா மாநிலங்களுக்கும் ஒரு தாக்கீதை அனுப்பி, மாநிலத்தில் உள்ள நிலைமையைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அந்தத் தாக்கீது வருவதற்கு முன்பே நாங்கள் இதிலே அக்கறை செலுத்திக்கொண்டு வருகிறோம். இதற்காக ஒரு கமிட்டியை ஏற்படுத்தியிருக்கிறோம். இங்கே மட்டுமல்லாமல் ஐ.சி.எம்.ஆர். இதற்காக மூன்று இடங்களில் அமைப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது. பூனாவில் ஓர் அமைப்பையும், வேலூரில் ஓர் அமைப்பை கிருஸ்டியன் மெடிக்கல் காலேஜிலும், புது டில்லியில் உள்ள ஐ.சி.எம்.ஆர். நிறுவனத்தில் ஓர் அமைப்பையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில்—

"As a special project, blood samples from 200 persons were collected, at random, from representative area where conditions of prospective virus population was possible."

எங்கெங்கே இந்த வைரஸ் நோய் இருக்கிறதோ அங்கெல்லாம் "சஸ்பெக்டெட் ரிஸ்க் குரூப்". அதிலும் ஹை ரிஸ்க் குரூப்பிலிருந்து 200 பேரிடமிருந்து பிளட் சாம்பிள்களை எடுத்து சோபிஸ்டிகேட்டட் முறையில் 'டெஸ்ட்' செய்யப்பட்டிருக்கிறது. அதிலே எலிசா என்று

ELIZA (Enmazye linke immuno?Solvet assay.)

டெஸ்டை ஏற்படுத்தி. வேலூரில் உள்ள சி.எம்.சி. மருத்துவமனையில் பரிசோதனை செய்ததில், 11 சேம்பிள்கள் பாசிட்டிவ் நிலையில் இருக்கின்றன என்று தெரிந்துகொண்ட பிறகு, அதை ஐ.சி.எம்.ஆர்.-க்கு அனுப்பினோம். ஐ.சி.எம்.ஆர். அதை அமெரிக்காவில் உள்ள மெரிலாண்டுக்குப் பக்கத்திலே உள்ள மருத்துவமனையான நேஷனல் இன்ஸ்ட்டிட்யூட் ஆஃப் ஹெல்த்துக்கு அனுப்பியது. அங்கே 6 கேஸ்கள் பாசிட்டிவ் என்று சொல்லப்பட்டது. இது 15 நாட்களுக்கு முன்பு சொல்லப்பட்டது. உடனடியாக டாக்டர் இராமலிங்கசுவாமியை சந்தித்தேன். முதலமைச்சரிடமும்

சொன்னேன். சட்டசபையிலே இதைச் சொல்லிவிடலாம் என்ற கருத்து ஏற்பட்ட நேரத்தில், ஐ.சி.எம்.ஆர் இன் சீஃபான டாக்டர் இராமலிங்கசுவாமி, "இப்போது சொல்ல வேண்டியதில்லை, இன்னும் ஒரு டெஸ்ட் செய்ய வேண்டியிருக்கிறது, அதை டில்லியிலே செய்துவிட்டால்—லிம்போசைட்ஸ் (Lymphocytes) என்ற டெஸ்டைச் செய்துவிட்டால் அதாவது எவ்வளவு ஏற்பட்டிருக்கிறது என்று பார்த்துவிட்டால், நமக்குத் தெளிவாகிவிடும், அப் லிம்போசைன் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று பார்த்துவிட்டால், நமக்குத் தெளிவாகிவிடும், அப்போது சொல்லலாம் என்று சொன்னார்கள். இதிலே ஒரு சிக்கல். சாதாரணமாக இந்த நோய் இருக்கக்கூடிய பாசிட்டிவ் கேஸ்களுக்கு 'சிம்டம்' இருக்கும். ஆனால் இந்த ஆறு கேஸ்களுக்கும் 'சிம்டம்' இல்லாமல் இருப்பதால், அதாவது டையாரியா போன்ற 'சிம்டம்' இல்லாததால், கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது என்று சொல்லி, அந்த ஆறு கேஸ்களுக்கும் இன்னுமொரு டெஸ்டைச் செய்துவிட்டு 'லிம்போசைட்ஸ்' குறைந்திருக்கிறதா என்பதைப் பார்த்துச் சொல்லுகிறேன் என்று சொன்னார்கள். மூன்று நாட்களுக்கு முன்பு, "28 ஆம் தேதியன்று, மேலவையில் சுகாதாரத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் வருகிறது, அப்போது அறிவிக்கலாமா ?" என்று கேட்டேன். "Hold on for one more day. The test is not completed.". என்று சொன்னார்கள்.

டெஸ்ட் செய்ததில் நேற்றைய தினம் 'லிம்போசைட்ஸ்' குறைந்திருக் கிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டு, மத்திய அமைச்சரவையில் உள்ள மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டது. இங்கேயிருந்து டாக்டர்கள் கமிட்டி வேலூர் டாக்டர் ஜாக்கப் தலைமையில் சென்றது. ஐ.சி.எம்.ஆர்.-ன் சீஃப் மத்திய அரசின் அதிகாரியாக இருப்பதால், மத்திய அரசிடம் சொன்னார்கள். எங்களுக்குத் தாக்கீது அனுப்பியது டிசம்பர் மாதத்தில்தான். எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சொல்கிறேன் மாதத்தில்தான். எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சொல்கிறேன். அவர்கள் அனுப்பிய தாக்கீதின் அடிப்படையில், அந்தக் கமிட்டி அமைக்கப் படவில்லை, ஏற்கெனவே நாம் கமிட்டியை அமைத்து இங்கே கண்டுபிடித்திருக் கிறோம்.

இதிலே இரண்டு வினாக்களை எழுப்பலாம். நாடாளுமன்றத்திலே சொன்னதற்குப் பிறகு, காலதாமதமாக இங்கே சொல்ல வேண்டிய நிலை ஏன் வந்தது என்பது பற்றி இதற்காக உள்ள நிலைமைகளை விளக்கமாகச் சொல்லிவிட்டேன். "கடைசியாக டெஸ்ட் செய்துவிட்டுச் சொல்லுகிறோம்.

அதற்குப் பிறகு அறிவிக்கலாம்" என்று அவர்கள் சொன்னார்கள். அடுத்தது, தமிழகத்திலே இருக்கிறதா இந்த பயங்கரமான வியாதி என்பதற்கு நான் பதில் சொல்வது பொருத்தமாக இருக்கும். என்னுடைய காமன்சென்சைப் பொறுத்தவரையில், இந்த வியாதிகள் "தேர்ட் வேர்ல்ட்", அதாவது வளர்ந்து கொண்டு வருகிற பல்வேறு நாடுகளில் இருக்கக் கூடும். இதைக் கண்காணிக்க இதற்கு ஒரு கமிட்டி தேவை என்று சொன்னவர் டாக்டர் இராமலிங்கசுவாமி அவர்கள். பாரதப் பிரதமர் அவர்கள் கூட இதைப் பற்றிய தகவலைக் கொடுங்கள் என்று அடிக்கடி கேட்கிறார்கள். இதை நான் எதற்காகச்

(முற்பகல் 10-25)

சொல்கிறேன்? மிகவும் எச்சரிக்கையாக நாம் ஒரு கமிட்டி அமைத்து, சேம்பிள்ஸ், ஹைலி சோபிஸ்டிகேட்டட் சேம்பிள்ஸ் என்று எடுத்துப் பார்த்ததிலே சில 'பாசிட்டிவ்' ஆக இருக்கின்றன. பல மாநிலங்களில் ரேண்டம் செக்காக எடுத்ததில், 'நெகடிவ்' ஆகக் கிடைக்கிறது. நான் சட்ட மன்றப் பேரவையிலே சொன்னதைச் சொல்கிறேன் என்னைப் பொறுத்த வரையில், இதிலே நாங்கள் ரொம்பவும் எச்சரிக்கையாக இருந்து கடுமையான பணியினை ஆற்றியிருக்கிறோம். அந்தப் பணியிலே ஈடுபட்டிருந்தவர்களில், குறிப்பாக சி.எம்.சி. டாக்டர் ஜேகப் ஜான் அவர்கள் இதிலே பலமுறை கவனம் செலுத்தியிருக்கிறார்கள். அந்தப் பணி அகில இந்திய அளவிலே ஒரு எச்சரிக்கையாகவே எடுக்கப்பட்டது. 'Don't take it for granted' என்ற அளவிலே சொல்லப்பட்டது. நம் நாட்டிற்கு வராது என்ற அளவிலே இருக்க வேண்டியதில்லை. அகில இந்திய அளவிலே சொல்லும்போது, ஒரு அபாயகர மான நிலையில், அபாயச் சங்கு ஊதுகின்ற அளவில் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அப்படிப் பணியாற்றுகின்ற டாக்டர்களும் மத்திய அரசுக்குச் சொல்லியிருக்கின்றார்கள். நம்மைப் பொறுத்தவரையிலே, அகில இந்திய அளவிலே அவர்களுக்கு நாம் நன்றி சொல்லவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பிரதமர் அவர்கள் தகவல் கொடுத்தார்கள். 'பிளட் டிரான்ஸ்மிஷன்' நாம் செய்கிறோம். அந்தப் பணியிலேயும் ஆய்வில் ஈடுபட்டிருக்கிறோம். காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். நாம் ஏற்கெனவே அதில் ஈடுபட்டிருக்கின்றோம். இதிலே "ஹைலி சோபிஸ்ட்டி கேடட் பிளட் டிரான்ஸ்மிஷன்", "ஆர்டினரி பிளட் டிரான்ஸ்மிஷன்" என்று இருக்கின்றன. "ஹைலி சோபிஸ்ட்டிகேட்டட் பிளட்" சில குரூப்பினருக்குப் பொருந்துவதில்லை. ஆகவே பிளட் குரூப்பும் கிறிஸ்ட்டியன் மெடிகல் காலேஜுக்குப் போவது என்பது கஷ்டமாக இருக்கும். ஆகவே ஒரு தனி

நிறுவனம் இங்கே ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும் இங்கே எழுப்பிய கேள்வியின் மூலமாக நான் இதை நன்கு விளக்குவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது ரொம்பவும் முக்கியமான பிரச்சினை என்ற காரணத்தினால், சற்று நேரம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் ஒரு விளக்கம் தருவதற்காகக் கேட்கிறேன். இந்த வியாதியைக் குறித்து நீண்ட காலமாக சுமார் 6 மாத காலமாக தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில், ஆங்கில ஏடுகளில், தமிழ் வார இதழ்களில் பல்வேறு கட்டுரைகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஒரு கட்டுரைக்கும் இன்னொரு கட்டுரைக்கும் தொடர்பு இல்லாமல் பல்வேறு முரண்பாடுகள் உள்ள நிலைமைகள் இருக்கின்றன. அப்படி கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இது குறித்து கடந்த 2, 3 மாத காலத்திற்கு முன்பே ஆராயப்பட்டது அல்லது குழு அமைக்கப்பட்டு அதில் டாக்டர்கள், நிபுணத்துவம் பெற்றவர்கள் எல்லாம் இருந்து பணியாற்றியதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்த முடிவுகள்பற்றி அறிவிப்பதற்கு இங்கே காலதாமதம் ஏற்பட்டு விட்டதாகச் சொன்னார்கள். அதை அவரே சொல்லிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாநில அரசு சொல்வதற்கு முன் மத்திய அரசு சொல்கின்ற சூழ்நிலையில், இந்த நோயுற்ற மக்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று சொல்லும் அதிகாரம் கூட, இன்றைக்கு மாநிலத்திற்கு உள்ள ஒரு சில அதிகாரங்கள் கூட மத்தியிலே உள்ளவர்களுக்குத்தான் இருக்கிறது என்ற சூழ்நிலையைக் கண்டு அதற்காக வருத்தப்படாமல் நாம் இருக்க முடியாது. இந்த நோய் முறைகேடான பாலுறவு முறையின் மூலமாக வந்திருக்கின்றது என்றும், நோயாளிகள், அந்த நோய் தொடர்புடையவர்கள் ரத்தத்தை மற்றவர்களுக்குச் செலுத்தும் போதும், அந்த நோயுற்றவர்கள் பக்கத்தில் இருந்தாலும், அவர்களுடைய உடல் மற்றறவர் உடலில் உராசினாலும் இந்த நோய் தொத்திக்கொண்டு விடுகின்றது என்று சொல்லி பல்வேறு செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. பல்வேறு நிபுணர்களும் டக்டர்களும் கூட எழுதுகின்ற கட்டுரைகள் வெளி வருகின்ற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதுவரையில் எடுத்துக்கொண்ட

அக்கறையுடன், தமிழ் நாட்டு மக்களுக்கும் பொதுவாக தமிழ்நாட்டிற்குப் பக்கத்திலே இருக்கின்ற மக்களும்கூட பயப்படுகின்ற இந்த நோயைப்பற்றி தீவிரமாக இருக்க வேண்டும். இந்த நோயைத் தடுக்க, கட்டுப்படுத்த என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப் பொது மக்களுக்குத் தெரிவிக்கின்ற வகையிலே நல்ல வழிமுறைகளைக் காணுவதற்கு இந்த அரசின் சார்பாக நடவடிக்கைகளை எடுப்பார்களா என்பதைப் பற்றி நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே முதலாவதாகச் சொல்ல வேண்டுமென்றால், சுருக்கமாக இரண்டு மணித் துளிகளிலே சாராம்சத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

This disease was first recognized in 1981 in USA in male homosexuals. The immune system is severely damaged and the person gets repeated and severe infections. The mortality rate is high.—
அந்த வகையிலே இதனுடைய சுருக்கம்—

The cause of this disease has been discovered in USA and France to be due to a virus infection. The virus is called LAV or HTLV—III. This virus infection is transmitted through four channels....
இதுதான் மிக முக்கியமானது. எதிர்க் கட்சித் தலைவர்கள் சொல்லிய 'ஆப்பரேடிவ் பார்ட்' தகவல்கள் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்—

....sexual contact, both homosexual and heterosexual contact, and transmit infection. (ii) blood transmission and introduction of some blood products.
ஒருவருக்குப் பயன்படுத்திய ஊசியை இன்னொருவருக்குப் பயன்படுத்தினால் இது பரவும்.

....contaminated needles and seen in intravenous drug abuses or drug addicts. Occasionally, from mother to infant also....
டிஸ்போசபிள் நீடில்ஸைப் பயன்படுத்த வேண்டும்.

அந்த மாதிரி தாய்ப் பால் குடிக்கிற நேரத்திலும் சில சமயங்களில் அது ஏற்படும். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை நல்ல கருத்தாகக் கருதுகிறேன். இது போதாது. தெளிவாக பேரவையிலே ஒரு பேப்பர் வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அந்த வகையிலே இதுபற்றி

இருக்கக்கூடிய எல்லா விஷயங்களையும் எடுத்துச் சொல்லி, ஒரு பேப்பர் அறிக்கை, 'அஃபிஷியல் புல்லடின்' அவையிலே வைக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே மத்திய அரசு உரிமைபற்றிச் சொன்னார்கள். It is not like that. என்னைப் பொறுத்தவரையில், சொல்கிறேன், 28 ஆம் தேதி அவர்கள் இங்கே இல்லை. முன்பு மத்திய அரசுக்கும் நமக்கும் ஒரு முறை ஒரு பிரச்சினை ஏற்பட்டது. குடும்பக் கட்டுப்பாடு மூலமாக பல இழப்புகள் ஏற்படுகின்றன. ஆகவே fiscul devolution கொடுக்க வேண்டுமென்று சொன்னோம். 'அப்ரிசியேஷன்' என்று சொன்னார்கள். அப்ரிசியேஷன் போதாது, பைனான்ஷியல் அப்ரிசியேஷன், பிஸ்கல் அப்ரிசியேஷன் வேண்டுமென்று சொன்ன நேரத்திலே அதை மறுத்தார்கள். பக்கத்திலே திரு. கமலபதி திரிபாதி அவர்கள் இருந்தார்கள். நானும், அவரும் சண்டை போடாத ஒரு குறைதான். நான் வெளிநடப்பு கூட செய்திருக்கிறேன்.

Dr. Ramalingaswami is a distinguished and outstand ng scientist. அவர்களிடத்திலே சொன்னேன். ஒரு சந்தேகம் வந்தது, Dean of the Madras Medical College, symptoms வரவில்லை. சிம்டம்ஸ் வராமல் பாசிடிவ் ஆக இருக்கிறது என்று சொன்னார்கள் How to co-ordinate the symptomlesness. Symptoms not being there, at the same time positive ஆக இருக்கிறது.

இது இரண்டையும் எப்படி கோ-ஆர்டினேட் செய்வது என்ற சந்தேகத்தில் அநாவசியமாக பீதி ஏற்படுத்த வேண்டாமென்று சொன்னார்கள். ஒரு 'டெஸ்ட்' செய்து சொல்கிறேன் என்று சொன்னார்கள். நேற்று காலையிலே கூட அறிவித்திருக்கலாம். அந்த டெஸ்ட் செய்து, பாசிடிவ் ரிசல்ட் வாங்கியிருப்பேன். நம்முடைய டாக்டர்கள் சொல்லியிருப்பார்கள். ஆனால் இரண்டு அவைகளையும் தள்ளி வைத்தோம். அவையில்லாத நேரத்திலே பல பிரஸ் நண்பர்கள் போன் செய்தார்கள். நான் மறுத்தேன். அவை இருக்கிற நேரத்திலே நான் பிரஸ்-லே சொல்லிவிட்டால், நாளைக்கு உரிமைப் பிரச்சினை கொண்டுவர உரிமை உண்டு என்று சொல்லி மறுத்தேன். அதைப் பொறுத்தவரையில், அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் மற்ற மாநிலங்களுக்குக் கூட நாம் முன்னோடியாக இதில் பல வேலைகளைச் செய்திருக்கிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்ன மாதிரி, இவைகளை முழுமையாக அறிக்கை மூலமாகத் தருகிறேன்.